## முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிரப்பு சட்டமூலத்திற்கான ஆரம்ப கருத்துரை

*18 செப்ரெம்பர் 2018, கொழும்பு, இலங்கை:*

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) நீக்குவதற்கான மாற்றீடாக முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதென அறிக்கையிடப்பட்டுள்ளமையினை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது கவனத்தில் கொள்கின்றது. அச்சட்ட மூலத்தினை தயாரிப்பதற்கான செயன்முறை இன்னும் வெளிப்படையானதாகவும் உள்வாங்குகையுடையதாகவும் அமைந்திருக்கலாம். எவ்வாறெனினும், அதன் இறுதி வெளியீடானது தற்போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்படுகின்ற பயங்கரவாதத்தினை எதிர்ப்பதற்கான அதிகாரங்களின் கட்டமைப்பில் மற்றும் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கான நகல் வரைபில் குறிப்பிடப்பட்ட கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மற்றும் வரவேற்கத்தக்க ஒரு சீர்திருத்தமாக அமைய வேண்டும். சட்டமூலத்தினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய கட்டமைப்பானது, பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு அரசிற்கு வழங்கப்பட்டிருக்கும் விதிவிலக்கான அதிகாரங்களில் அர்த்தமுள்ள சமநிலை தலையீடுகளை ஸ்தாபிப்பதனூடாக, தனிநபர் சுதந்திரம் மற்றும் அரசின் அதிகாரங்கள் என்பவற்றுக்கிடையில் சிறப்பான ஒரு சமநிலையினை பிரதிபலிக்க வேண்டும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது, குறிப்பிட்ட சட்டமூலத்தினை தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்கு அமைவாக மாற்றுவதற்கான மேம்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் என எண்ணுகின்ற அதேவேளை, குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் இடம்பெற்றிருந்த மிகவும் மோசமான அம்சங்கள் நீக்கப்பட்டிருக்கும் அல்லது குறைந்தபட்சம் மேம்படுத்தப்பட்டிருக்கும் என எண்ணுகின்றது. ஒப்புதல் வாக்குமூலம் (இது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பரவலான சித்திரவதை மற்றும் எதேச்சாதிகாரமான தண்டனைகள் என்பவற்றுக்கு வித்திட்ட காரணியாக அமைந்தது) மற்றும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தினை மழுங்கடிக்கக்கூடிய வகையில் உள்வாங்கப்பட்டுள்ள பரந்தளவிலான ஏற்பாடுகள் என்பனவற்றின் நீக்கத்தினை இவை உள்ளடக்குகின்றன. சந்தேக நபர்கள், சட்டத்தரணிகள் மற்றும் நீதவான்களை அணுகக்கூடிய வாய்ப்பு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரந்தளவான வகிபங்கு மற்றும் கைதுசெய்வதற்கான மற்றும் தடுத்துவைப்பதற்கான அதிகாரம் என்பன உறுதியான நீதிமுறை காப்பீடுகளினால் பரிசீலனைக்குட்படுத்தப்படுதல் மற்றும் குற்றம் சுமத்தப்படாது தடுத்துவைத்திருக்கக்கூடிய காலப்பகுதியினை குறைத்தல் என்பன மேம்பாடுகளுக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

இருந்த போதிலும், அரசாங்கத்தின் சில உறுப்பினர்கள் சட்டமூலத்திலுள்ள சில பரந்த கொள்கையினையுடைய ஏற்பாடுகள் பற்றி தங்களுடைய அதிருப்தியினை வெளியிட்டுள்ளனர் என ஊடகங்களில் குறிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மற்றும் குழு நிலை திருத்தங்களின்போது குறிப்பிடப்பட்ட மிக மோசமான அம்சங்கள் மீண்டும் சட்டமூலத்திற்குள் உள்ளடக்கப்படுவதற்கான அபாயம்

நிலவுகின்றமை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது விசனமடைகின்றது. நீதித்துறை மற்றும் இலங்கைப் பிரஜைகளின் கண்காணிப்பிற்கு அப்பால் நிகழ்கின்ற குழு நிலை திருத்தங்கள் தொடர்பிலான தனது விசனத்தினை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது தொடரச்சியாக வெளியிட்டு வருகின்றது. இத்தகைய அழைப்புக்களை நிராகரிக்குமாறும், சர்வாதிகாரவாதம் மற்றும் எதிர்கால மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கக்கூடிய அத்தகைய நியமமற்ற திருத்தங்களினூடாக சட்டமூலத்தின் நாணயத்தன்மையினை சீர்குலைக்க அல்லது ஒழிக்க வேண்டாமெனவும் நாம் அரசாங்கத்தினை வலியுறுத்துகின்றோம். மேலும், குறிப்பிட்ட சட்டமூலமானது பாராளுமன்றத்தில் விவாதங்களுக்கு உட்படுத்தப்படுவதற்கு முன்னர் பொதுமக்களால் நன்கு ஆராயப்பட்டு அதன் உள்ளடக்கங்கள் விவாதிக்கப்படுவதனை சாத்தியமாக்கும் பொருட்டு அதனை முடிந்தளவு விரைவாக வெளியிட வேண்டுமென மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது அரசாங்கத்தினை வலியுறுத்துகின்றது.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka
Tel: ++94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org